# 21. நவரத்தின மாலை

## காப்பு

ஆக்கும் மணிமாலை ஆனைமுகன் தாள்பணிந்து
நோக்கும் படிசிந்தை கூடுவாம் — பூக்குமே
நற்குடி வாழ்நனி நல்லதிருக் காரணிப்
பொற்கொடி சூடும் பொருட்டு.

## மாணிக்கம்

நிழலாய் விளங்கி நின்றென்றும்
நினையே நெஞ்சின் நினைவேற்கு
நிதியாய் நோற்றுப் பணிகின்ற
நிட்டை நிதஞ்சேர் நான்முகியே
குழகன் அணியுங் கொன்றைத்தார்க்
குழலாய்! கோலத் தெழிலோடு
குறையில் மாணிக் கமேசூடக்
குன்றாக் குழையைக் கொண்டனையோ
வழகார் இதயம் வாழ்கின்றாய்
வரையோன் பெற்ற வார்சடையாய்
வளங்கொள் நின்றன் விளையாட்டின்
வண்ணம் உலகாம் வான்முகிலே
அழகார் மதுரை மீனாட்சி
அறங்கூர்ச் சைதைப் பொற்கொடியே
அடிமை கொண்டாய் அருள்வாமி
அன்னாய் சிவசொர் ணாம்பிகையே 1

## முத்து

பணிகொள் கற்றைப் புனற்குழலாய்
பசுவேன் போற்றும் பாங்குடையாய்
படரும் ஞானத் திருநீற்றால்
பாசந் தொடராப் பார்ப்பதியே
பிணிகொள் வாழ்வைத் துறப்போரின்
பிறப்பைப் போக்கும் பிஞ்சகியே
பிறையைச் சூடும் பெருமாட்டி
பீடத் தமரும் பூங்கொடியே

மணிகொள் கண்டன் அணைகின்ற
மயிலே முத்தே மாமையளே
மடங்கொள் அனமே மலைச்செல்வி
மட்டில் முகிழ்த்தாய் மூரலுற்றே
அணிகொள் தில்லைச் சிவகாமி
அறங்கூர்ச் சைதைப் பொற்கொடியே
அடிமை கொண்டாய் அருள்வாமி
அன்னாய் சிவசொர் ணாம்பிகையே. 2

### பவளம்

துறவோ ரென்னும் ஞாயிற்றைத்
துணையா யீந்த தேமொழியே
துதிக்குந் திங்கள் அணிகின்றாய்
துன்பங் களையுந் தூயவளே
பிறவா தென்றும் வாழ்கின்ற
பிடியே செவ்வாய்ச் செம்பவளம்
பிறங்கும் போதப் பொருள்தந்தே!
பித்தன் பரவும் அற்புதமோ?
மறவேன்! ஞானந் தந்தென்றும்
மயல்தீர்த் தாளும் நற்குருவை
மதிக்கும் வாழ்வே விடிவெள்ளி
மாவாய்ச் சனியேன் நின்னருளால்
அறவோர் காஞ்சிக் காமாட்சி
அறங்கூர்ச் சைதைப் பொற்கொடியே
அடிமை கொண்டாய் அருள்வாமி
அன்னாய் சிவசொர் ணாம்பிகையே 3

### மரகதம்

மடியார் மாளும் வகைதந்து
மயலார் நீங்குந் தன்மைதந்தாய்
மதங்கொள் வேகங் கெடுத்தாளும்
மன்னேர் மறையே! மாதவமே!
மிடியார் மாளும் நிலைதந்து
மிகைகொள் அச்சம் போக்கியருள்
மிளிரும் வண்ண மலர்ப்பாதம்
மின்னேர் மணியே மரகதமே!

துடியார் தையால்! துரியத்தே
துணையாய்த் தோன்றுந் தண்ணளியே
துதிசெய் நெஞ்சந் திகழ்கின்ருய்
தொன்னேர் நெறிகொள் தோத்திரத்தாய்
அடியார் ஆரூர்க் கமலாட்சி
அறங்கூர்ச் சைதைப் பொற்கொடியே
அடிமை கொண்டாய் அருள்வாமி
அன்னுய் சிவசொர் ணும்பிகையே 4

## பத்மராகம்

நமனை நசுக்கும் நாதத்தை
நயந்து நானும் பெற்றிடவோ
நலங்கொள் ஞாலந் தெளிவிக்கும்
நல்லாய், நடங்கொண் டாடுகின்ற
குமர மணியைக் குன்றமுறுங்
குறவர் கோவை நித்தியத்தைக்
குருவா யீந்தாய் குணக்குன்றே
குன்ருக் கனகக் குண்டலியே
வெமர வணியும் வார்குழலில்
வெதும்பா வண்ணப் பத்மராகம்
வெளியேன் சூட்ட விழைகின்றேன்
வெள்ளை உளஞ்செய் வாலையளே
அமரர் கயிலைப் பார்வதியே
அறங்கூர்ச் சைதைப் பொற்கொடியே
அடிமை கொண்டாய் அருள்வாமி
அன்னுய் சிவசொர் ணும்பிகையே 5

## வைரம்

உரனர் உள்ளம் உவந்தீயும்
உரகம் ஆடும் வார்ச்சடையாய்
உவணம் ஊர்ந்தோ னிளையோளே
ஊழை ஒறுத்தாய் உத்தமியே
சுரனய் வாழுஞ் சுகம்வேண்டேன்
சுடரும் வைரம் தேர்ந்தணிவாய்
சுவையூ றெளிகொள் நுகரோசை
சூழும் புலன்சேர் சூலியளே

நரனய் என்றும் பிறப்புற்ருல்
நலமே நின்னை யேத்திடவே
நவையில் ஞானம் நயந்தேற்கு
நல்கும் நடனர் நாயகியே
அரனர் காசி விசாலாட்சி
அறங்கூர்ச் சைதைப் பொற்கொடியே
அடிமை கொண்டாய் அருள்வாமி
அன்னய் சிவசொர் ணம்பிகையே 6

## நீலம்

உமிழ்ந்தாய் உலகம் பதினன்கை
உவக்கும் வண்ணம் ஒண்ணுதலே
உறவாந் தாய்நீ மகவேனின்
உள்ளம் உறையும் உட்பொருளே
இமிழ்ந்தார்த் தெழும்புங் கடல்நீலம்
இழையச் சூடும் நன்மணியே
இகங்கொள் வாழ்வின் இயல்பாகும்
இன்னல் களையும் இன்னமுதே
தமிழ்ப்பா வளித்துத் தெளிவித்தாய்
தனயன் தேருந் தாயலவோ
தனஞ்சேர் தான்யம் தருகின்ருய்
தண்டா மரையே தாழ்குழலே
அமிழ்தக் கடவூர் அபிராமி
அறங்கூர்ச் சைதைப் பொற்கொடியே
அடிமை கொண்டாய் அருள்வாமி
அன்னய் சிவசொர் ணம்பிகையே 7

## கோமேதகம்

சிலையை யெடுத்த மன்மதனைச்
சினந்து சுட்ட சங்கரனர்
சிறிதும் ஆலம் விழுங்காதே
சித்தஞ் செயுநற் சங்கரியே
மலையை யெடுத்த மாவரக்கன்
மதத்தோள் நைய ஊன்றியதுன்
மலராய்த் தோன்றும் பதமென்று
மறைகள் மொழியும் மேன்மையளே

கலையைக் கொழிக்குந் தண்கதிரின்
கவினைக் கூட்டுங் கூன்பிறையைக்
கனிந்தே சூடுங் கலாவல்லி
கோமே தகங்கொள் கோகிலமே
அலைசூழ் மயிலைக் கற்பகமே
அறங்கூர்ச் சைதைப் பொற்கொடியே
அடிமை கொண்டாய் அருள்வாமி
அன்னாய் சிவசொர் ணாம்பிகையே 8

## வைடூரியம்

நளிகொள் நின்னை நாடுகின்ற
நசையை யென்றும் நல்கிடுவாய்
நடஞ்செய் கோனை நினைவார்க்கு
நாளும் நிறைசேர் நாரியளே
களிகொள் உள்ளந் தூய்மையுறக்
கருணை தந்தீர்த் தாள்பவளே
கனலும் மண்ணுங் குளிர்கின்ற
காற்றும் புனலும் கூடுகின்ற
வெளிகொள் பஞ்ச பூதமுறும்
வினையேன் வாழ்வில் வாழ்பவளே
விரைகொள் பாதாம் புயத்தாளே
வைடூ ரியங்கொள் வைணவியே
அளிகொள் நெல்லைக் காந்திமதி
அறங்கூர்ச் சைதைப் பொற்கொடியே
அடிமை கொண்டாய் அருள்வாமி
அன்னாய் சிவசொர் ணாம்பிகையே 9

## நூற்பயன்

பத்தியால் அன்றிசேர் சொற்கவிப் பாங்கொடே
உத்தியால் செய்திடா ஒண்மணி மாலையாய்
கத்திடுங் கார்க்கடல் சூழுல காள்பவர்
நித்தமும் நாரிகொள் நெஞ்சினல் நல்லரே

---